

திருச்சி தெற்கு மாவட்டம், மாவட்ட மாநகர இளைஞரணி சார்பாக, திருச்சி கிழக்கு, திருவெறும்பூர் மற்றும் மணப்பாறை ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் கலைஞர் நூற்றாண்டு நூலகங்களை மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்து 10,12 ம் வகுப்பில் முதல் மூன்று மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு இலவச கைக்கணினி வழங்கினார். கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட 3 தொகுதிகளிலும் நூலகங்கள் திறக்கப்பட்டன. இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மதிவாணன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள் ஈரோடு பிரகாஷ் எம்.பி., ஜோயல், இன்பா (ஏ) ரகு, அப்துல் மாலிக், ஆனந்தகுமார், பிரபு, இளையராஜா, சீனிவாசன், பிரதீப் ராஜா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வெங்கடேஷ்குமார், மாநகர இளைஞரணி அமைப்பாளர் முத்து தீபக் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



அரியலூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், அரசு பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா புத்தகம் மற்றும் நோட்டுகள் வழங்குதல் மற்றும் ஆதார் கார்டு பதிவு மற்றும் புகைப்படம் எடுக்கும் நிகழ்ச்சியை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர், ஆனிமேரி ஸ்வர்ணா, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகர், நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், நகர கழக செயலாளர் இரா.முருகேசன், தெய்வ.இளையராஜா, கே.சி.லூயிகதிரவன், செல்வம் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தோழர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவியர் பலரும் கலந்துகொண்டனர்.

## தி.மு.க.வைப் பற்றி விமர்சிக்க

# எடப்பாடி பழனிச்சாமிக்கு தகுதி உள்ளதா?

### சட்டத்துறை அமைச்சர் ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை ஜுன் 11-

புதுக்கோட்டை திருவப்பூர் முத்துமாரியம்மன் கோயில் விமான கும்பாபிஷேக பாலாலய விழாவை தமிழக சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்து கொண்டு தொடங்கி வைத்தார்.



இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் எஸ்.ரகுபதி, தனித்து வருவோம் என்று சொன்னவர்கள் இன்று தனித்து விடப்பட்டுள்ளார்கள், இன்று கூட்டணியின் தயவு இல்லாமல் அவர்கள் ஆட்சியை நடத்த முடியாது என்ற சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். நிச்சயமாக இது நிலைத்திருக்கக்கூடிய ஆட்சியாக இருக்காது என்பது அரசியல் வல்லுனர்களுடைய கருத்தாக அமைந்திருக்கிறது.

இந்தியா கூட்டணிக்குக் கிடைத்திருக்கிற வெற்றி என்பது மகத்தான வெற்றி. நானூறு இடங்களுக்கு வருவோம் என்று சொன்னவர்கள் 234 இடங்களுக்குள் தான் பெற்றுள்ளனர். ஆனால் எங்களது கூட்டணி சிறப்பாக எதிர்க்கட்சியாக பணியாற்றக்கூடிய அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளது. அதனால் இந்தியா கூட்டணி இந்த வெற்றியைக் கொண்டாடுவதில் எந்த ஒரு தவறும் கிடையாது. அது மகிழ்ச்சியான ஒன்றுதான் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எங்களது தமிழ்நாடு முதலமைச்சர் 40க்கு 40 என்ற முழக்கத்தோடு தேர்தல் களத்தை ஆரம்பித்து 40க்கு 40 என்ற சபதத்தை தமிழ்நாட்டில் நாங்கள் நிறைவேற்றி உள்ளோம்.

**பொறுத்திருந்து பார்ப்போம்!**

எடப்பாடி பழனிச்சாமி அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர். ஆனால் அந்தக் கட்சிக்குள் என்னென்ன நடக்கிறது என்பது அவருக்கு நன்றாகவே தெரியும். நாங்கள் அ.தி.மு.க.வை பற்றி விமர்சிக்கவில்லை. ஆனால் தி.மு.க.வை பற்றி பேசுவதற்கு எடப்பாடிக்கு என்ன தகுதி இருக்கிறது. தி.மு.க.வைப் பற்றியும் தமிழ்நாடு முதலமைச்சர் பற்றியும் விமர்சிப்பதற்கு எடப்பாடி பழனிச்சாமிக்கு தகுதி இருக்கிறது என்றால் அ.தி.மு.க. பற்றி பேசுவதற்கு ரகுபதிக்கு நிச்சயம் தகுதி உண்டு.

அ.தி.மு.க.வில் என்னென்ன கூத்துக்கள் நடக்கப் போகிறது என்னென்ன புரட்சி வெடிக்கப் போகிறது என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

தமிழிசை சொன்ன குற்றச்சாட்டை தான் நாங்கள் ஏற்கனவே சொல்லி உள்ளோம். குற்றவாளிகளை பா.ஜ.க. சேர்த்து வருகிறது என்பதை நாங்கள் ஏற்கனவே கூறி வருகிறோம். அதற்கு இன்று தமிழிசை ஒப்புதல் அளித்துள்ளார்.

பா.ஜ.க.வுக்குக் கிடைத்துள்ள வாக்கு வங்கி பா.ம.க. மற்றும் அதன் தோழமைக் கட்சிகளைச் சேர்த்து வாங்கியுள்ள வாக்கு வங்கி தானே தவிர பா.ஜ.க. தனித்து வாங்கிய வாக்குகளாக நாங்கள் கருதவில்லை.

எங்களுடைய வாக்கு வங்கி என்றைக்குமே குறைவாகாது. எங்களை பொறுத்தவரை வாக்குகள் சிதறி இருக்கின்றனவே தவிர நிச்சயமாக திமுக கடந்த முறை வாங்கிய வாக்குகளை தான் வாங்கி உள்ளோம். கடந்த முறை 24 இடங்களில் நின்றோம் இந்த முறை 22 இடங்களில் நின்றுள்ளோம். அதனால் அந்த சதவீதத்தை கணக்கிட்டுள்ளனர். அதனால் எங்களது கூட்டணி எப்போதும் பெற்றுள்ள வாக்குகளை நாங்கள் பெற்றுள்ளோம்.

தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அமைச்சர்கள் ஒதுக்கப்பட்டால் வரவேற்போம். அப்படி வரக்கூடியவர்களால் தமிழ்நாட்டிற்கு நல்லது கிடைக்கும் என்ற நல்லெண்ணத்தோடு வரவேற்போம்

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.

## பழனியில்

# சர்வதேச முத்தமிழ்க் கடவுள் முருகன் மாநாடு!

### கோவில் பூசாரிகள் நல சங்கம் பாராட்டு! பி.வாசு அறிக்கை!

சேலம், ஜுன் 11-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேரில் சந்தித்து சேலத்தை தலைமையிடமாகக் கொண்ட கோவில் பூசாரிகள் நலச் சங்கம் மாநிலத் தலைவர் பி. வாசு பூசாரி நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் தமிழ்நாடு மற்றும் புதுவை உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி வாகை சூடியதைப் பாராட்டும் வகையில் வாழ்த்து தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களையும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களையும் ஆதரித்து தமிழ்நாடு முழுவதும் உள்ள ஐந்து லட்சம் பூசாரிகள் பிரச்சாரம் செய்து அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த 25 லட்சம் வாக்காளர்களும் ராமருக்கு அணைகட்ட சிறு அணில் செய்த உதவி போல (தரங்க நீர் அடைக்கலுற்ற சலம் இலா அணிலும் போலே என்று தொண்டரடிப்பொடியாழ்வார் பாடியது போல) வாக்களித்து துணை நின்றனர்.

தமிழ்நாடு இந்து அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபுவையும் அவரது இல்லத்தில் வெள்ளிக்கிழமை மாலை 3: 20 மணியளவில் நேரில் பி.வாசு பூசாரி சந்தித்து தேர்தல் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்து பூசாரிகள் நல வாரியம் தொடர்பாக கோரிக்கை மனு அளித்தார். முத்தமிழ்க் கடவுள் முருகன் மாநாட்டை சர்வதேச அளவில் அறுபடை வீடுகளில் ஒன்றான பழனி திருத்தலத்தில் விமரிசையாக நடத்த ஏற்பாடு செய்துவரும் அமைச்சர் பி.கே. சேகர் பாபு அவர்களுக்குப் பாராட்டும் நன்றியும் தெரிவித்தார்.

திராவிட மாடல் ஆன்மீக ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சீரிய தலைமையில் பீடு நடை போட்டு மாபெரும் மாநாட்டை அகில இந்திய அளவில் பழனியில் முதன்முறையாக நடத்த பி.கே. சேகர்பாபு மேற்கொண்டுள்ள முயற்சி வரவேற்கத் தக்கது. தமிழ்நாட்டில் இது வரை ஆட்சி செய்த எந்த அரசும் செய்யாத சாதனை இந்த மாநாடு என்றும் அவர் புகழாரம் சூட்டினார்.

இந்தச் சந்திப்பின்போது கோவில் பூசாரிகள் நலச் சங்க பொருளாளர் கே.சுந்தரம், பூசாரியின் குரல் ஆசிரியர் த.புருஷோத்தமன் உடன் இருந்தனர்.



சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் முத்தமிழறிஞர்கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கலைஞர் 101வது பிறந்தநாள் விழாவையொட்டி காலம் கடந்த கலைஞர் கண்காட்சி நடைபெற்று வருகிறது. இக் கண்காட்சியினை விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளரும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் அமைச்சருமான செஞ்சி மஸ்தான் நேரில் சென்று பார்வையிட்டார்.



ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு,முத்துசாமி வழிகாட்டுதலின் படி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101வது பிறந்த நாளையொட்டி ஈரோடு மாநகர கழக இளைஞரணி சார்பில் மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் ஜாகிர் உசேன் ஏற்பாட்டில் ஈரோடு சோலார் பஸ்நிலையம் அருகில் உள்ள அட்சயம் முதியோர் இல்லத்தில் முதியோர்களுக்கு காலை சிற்றுண்டி மற்றும் நல உதவிகளை மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் வழங்கினார். நிகழ்வில் ஆர். பொன்னுசாமி, பாத்திமா, கே.டி.சேந்தபுகழன், இரா.நித்தின் நவீன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணியினர் பலர் உள்ளனர்.

## பேராவூரணி முரசொலி முகவர்

# எம்.சண்முகம் மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!

தஞ்சை, ஜூன் 11–



தஞ்சை மாவட்டம் பேராவூரணி கணேஷ் நியூஸ் ஏஜென்சி உரிமையாளரும் முரசொலி முகவருமான எம்.சண்முகம் நேற்று முன்தினம் (9.6.2024) மதியம் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்

தகவல் அறிந்து கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து, அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று (10.6.2024) நடைபெற்றது.

## ஈரோடு வடக்கு மாவட்டம் தலைமை பொதுக்குழு உறுப்பினர்

# எஸ்.எஸ்.வெள்ளியங்கிரி இல்ல திருமண வரவேற்பு விழா!

### அமைச்சர் சு.முத்துசாமி – மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம் தலைமை!

ஈரோடு, ஜுன் 11 -

கழக தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசியுடன், கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்பு செயலாக்க துறை அமைச்சருமான உதயநிதிஸ்டாலின் நல்வாழ்த்துக்களுடனும் ஈரோடு வடக்கு மாவட்டம் தலைமை பொதுக்குழு உறுப்பினர் எஸ்.எஸ.வெள்ளியங்கிரி வெ.கீதா மகன் வெ.சபரிநாதன், புளியம்பட்டி ஏ.கணேசன் க.மங்கயர்கரசி மகள் க.கிருத்திகா ஆகியோரின் திருமண வரவேற்பு விழா 14.06.2024 வைகாசி மாதம் 32ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை கொளப்பலூர், காமராஜ் நகர், பாரதி மஹாலில் நடைபெற உள்ளது.

திருமண வரவேற்பு விழாவில் ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி, ஈரோடு வடக்கு மாவட்டக் கழக செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் அமைச்சர் பெருமக்கள், தலைமை கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, வார்டு, கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்த உள்ளனர்.

## மின் கழக தொ.மு.ச.சார்பில்

# சிங்கார இரத்தின சபாபதி 4ஆம் ஆண்டு நினைவு தினம்!

### எம்.பி.வெங்கடேசன் தலைமையில் திருவுருவப்படத்திற்கு மரியாதை!

சென்னை ஜுன்,11-

தமிழ்நாடு மின் கழக தொழிலாளர் முன்னேற்ற சங்க முன்னாள் மாநில பொதுச் செயலாளர் மறைந்த சிங்கார ரத்தின சபாபதி அவர்களின் 4 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, இன்று (11.6.2024 -செவ்வாய்க் கிழமை) காலை 9 மணி அளவில் வளசரவாக்கம் உப கோட்டத்தில் அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலைகள் அணிவித்து மரியாதை செலுத்தி அன்னாரின் நினைவு போற்றப்படுகிறது.

நிகழ்ச்சிக்கு மின் கழக தொ.மு.ச. மாநில பிரச்சாரக் குழு செயலாளரும் தெற்குதிட்ட துணைத் தலைவருமான எம்.பி. வெங்கடேசன் தலைமை வகிக்கிறார்.

இதில் மின் கழக தொ.மு.ச. மாநில நிர்வாகிகள் மற்றும் தெற்குதிட்ட நிர்வாகிகள்,கிளை நிர்வாகிகள்,கேங்மேன் மற்றும் ஒப்பந்த ஊழியர்கள்,தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நிகழ்ச்சியில் அனைத்து ஊழியர்களுக்கும் காலை உணவு வழங்கப்படுகிறது.



நாகை நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த வை.செல்வராஜ் நாகை மாவட்டம் திருக்குவளையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த இல்லத்தில் உள்ள கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.உடன் நாகை மாவட்ட கழக செயலாளர் என். கௌதமன், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் நாகைமாலி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் இரா.மாரிமுத்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் சிவகுரு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப. கோவிந்தராஜன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் சோ.பா.மலர்வண்ணன், ஆ.தாமஸ்ஆல்வாளடிசன், மகா.குமார், செல்வ.செங்குட்டுவன், என. சதாசிவம், சிக்கல் என்.ஆனந்த், நகர கழக செயலாளர்கள் இரா. மாரிமுத்து, எம் .ஆர். செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் இல. பழனியப்பன் மற்றும் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சிங்கார இரத்தினசபாபதி

**ஜுன் 11 (2020)**



**தொ.மு.ச. பேரவையில் இணைப் பொதுச்செயலாளர், பொருளாளர் – தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் ஆகிய பொறுப்பு வகித்ததோடு, மின்கழக தொ.மு.ச. தலைவராக – பொதுச்செயலாளராகவும் பொறுப்பு வகித்து, மின் வாரிய தொழிலாளர்களுக்காக பாடுபட்டவர்.**

**கழக ஆட்சியில், மின் ஊழியர்களுக்கு முதல்முறையாக ஊதிய உயர்வு – அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் பெற்றுத் தந்தோடு, ஆயிரக்கணக்கான ஒப்பந்த ஊழியர்களுக்கு பணி நிரந்தரம் பெற்றுத் தந்தார். அ.தி.மு.க. ஆட்சியில் ஊழியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை கண்டித்துப் போராட்டங்கள் நடத்தியதோடு, 2.57 சதவீத ஊதிய உயர்வை போராடிப் பெற்றுக் கொடுத்தது என மின்வாரிய ஊழியர்களின் நலன்களுக்காகவும் – உரிமைகளுக்காவும் தொடர்ந்து குரல் கொடுத்தவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் பேராசிரியர் பெருந்தகையின் பேரன்பையும் பாசத்தையும் பெற்றதோடு, தலைமைக் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் – மாநாடுகளிலும் மின்கழக தொ.மு.ச.வினரை பெருந்திரளாக பங்கேற்க வைத்து, கழகத்தின் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**